# சிறிய ரக ராக்கெட்களை ஏவுவதற்காகவே குலசேகரன்பட்டினத்தில் புதிய ஏவுதளம் : இஸ்ரோ தலைவர் சோம்நாத் தகவல்



**சென்னை:** சிறிய ரக ராக்கெட்களை ஏவுவதற்காகவே குலசேகரன்பட்டினத்தில் ஏவுதளம் உருவாக்கப்படுகிறது என்று இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத் தெரிவித்தார்.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறை தொடர்பான வல்லுநர்கள் சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பில், டிஆர்டிஓ முன்னாள் தலைவர் கிறிஸ்டோபர் மற்றும் இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத் ஆகியோர் உரையாடினர். அப்போது, கேள்விகளுக்கு பதிலளித்து சோம்நாத் கூறியதாவது:

சந்திராயன் 3 என்பது மக்களின் மனங்களுடன் தொடர்புடையது. சந்திராயன் 2-ன் தோல்வியில் இருந்து பல விஷயங்களை கற்றுக் கொண்டோம். என்ன தவறு நேர்ந்தது என்பதை கண்டறிந்து இதன் மூலம் சந்திராயன்-3 ன் இலக்கை நிர்ணயித்து செயல்பட்டோம்.

நிலவில் இருந்து முந்தைய லேண்டரின் பாகங்களை பெற்று புதியதை தயாரிக்க முடியாது. அவ்வாறு பாகங்களை பெற்றால் என்ன தவறு நிகழ்ந்தது என்பதை

தெரிந்து கொள்ளலாம். புதிதாகதான் தொடர்ந்து தயாரிக்க முடியும். எந்த குறிப்பிட்ட பகுதியில் என்ன தவறு நிகழ்ந்துள்ளது என்பதை அறிந்து அதை கருத்தில் கொண்டு புதியது தயாரிக்கப்பட்டது.

நாம் இன்னொரு தோல்வியை சந்திக்கக்கூடாது. எனவே மேலும் இரண்டாண்டுகள் சந்திரயான் 3- தயாரிக்க எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்பின்பு நாங்கள் அந்த செயற்கைக் கோளை உருவாக்கி தொடர்ந்து பல பரிசோதனைகளை தொய்வின்றி மேற்கொண்டோம். எங்களது முக்கியமான இலக்கு மெதுவாக தரையிறங்கச்செய்வதுதான். இதற்கான உத்தரவை மட்டும் நான் வழங்கினேன். இதற்காக நாங்கள் 6 மாதங்கள் கூடுதலாக எடுத்துக் கொண்டோம். இதுதான் எங்களின் வெற்றிக்கு காரணமானது.

ககன்யானை பொறுத்தவரை, கரோனா உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் திட்டம் நிறைவேறுவது தள்ளிப்போனது. இந்த ஆண்டில், ஆளில்லா ராக்கெட் அனுப்புவது தொடர்ந்து ஆய்வு செய்யப்படும். அடுத்த 2025-ம் ஆண்டு இறுதியில் மனிதர்களை நிலவுக்கு அனுப்புவதற்கான பணிகள் இறுதியடையும். 100 சதவீதம் நம்பிக்கை ஏற்பட்ட பின்னரே அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மனிதர்களை நிலவுக்கு அனுப்புவதற்கான திட்டமிடல் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு பாதுகாப்பும் முக்கியம்.

குலசேகரன்பட்டினத்தில் அமைக்கப்படும் புதிய ஏவுதளம் என்பது, ஹரிகோட்டாவுக்கு மாற்றானது அல்ல. கூடுதல் ஏவுதளமாக அமைக்கப்படுகிறது. குலசேகரன்பட்டினம் ஏவுதளம் என்பது தென் பகுதியில் இருந்து சிறிய ராக்கெட்களை ஏவுவதற்கு வசதியாக இருக்கும். இந்த ஏவுதளத்தில் இருந்து குறைந்த காலகட்டத்தில் 20 அல்லது 30 ராக்கெட்களை ஏவ முடியும். இது, அதிகளவிலான சிறிய ராக்கெட்களை உருவாக்குவதற்கு வசதியாக இருக்கும்.

இதன்மூலம், அப்பகுதியை சுற்றிலும் பல தொழில் வளாகங்கள் உருவெடுக்கும். ராக்கெட் தயாரித்தலில் தற்போது வருவாய் அதிகம் ஈட்ட இயலாது. அதே நேரம் செயற்கைக்கோள் தயாரித்தலில், வருவாய் பெற முடியும். மேலும், தொழில்துறையினர், செயற்கைக் கோளில் பயன்படுத்தப்படும் பல்வேறு ‘அப்ளிகேசன்’களை உருவாக்கும் பணிகளில் ஈடுபடலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் முதல் நாளில் தமிழகத்தில் ரூ.50,634 கோடி முதலீடுக்கு ஒப்பந்தம்




**சென்னை:** சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் முன்னிலையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நேற்று தொடங்கியது. முதல் நாளில் ரூ.50,634 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், கோத்ரெஜ் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் புதிய திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

தமிழக பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்தும் இலக்கை முதல்வர் ஸ்டாலின் நிர்ணயித்துள்ளார். இதன் அடிப்படையில், பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 2 நாள் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை முதல்வர் ஸ்டாலின், மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

இந்த மாநாட்டின் முதல்நாளான நேற்று, ஹூண்டாய், குவால்காம், பர்ஸ்ட் சோலார், கோத்ரெஜ், டாடா, பெகட்ரான், ஜேஎஸ்டபிள்யூ, டிவிஎஸ், மிட்சுபிஷி, ஏ.பி.மோலார் மெர்ஸ்க், வின் பாஸ்ட் உள்ளிட்ட நிறுவனங்கள் சார்பில், ரூ.50,634 கோடி முதலீட்டுக்கான புதிய ஒப்பந்தங்கள் முதல்வர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் 49,550 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மேலும், துறைவாரியாக பல்வேறு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. ஒரே நாளில் 100 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மாநாட்டின் நிறைவு நாளான இன்றும் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன. இம்மாநாட்டில் எவ்வளவு கோடி ரூபாய் முதலீட்டுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன என்ற இறுதி நிலவரத்தை முதல்வர் ஸ்டாலின் இன்று மாலை அறிவிப்பார். சுமார் 5.5 லட்சம் கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என தமிழக அரசு தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு குறைக் கடத்தி (செமிகண்டக்டர்) மற்றும் மேம்பட்ட மின்னணுக் கொள்கை 2024, மற்றும் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கை எய்துவதற்கான செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட, மத்திய அமைச்சர் பியூஷ்கோயல் பெற்றுக் கொண்டார். இதையடுத்து, க்வால்காம் டிசைன் சென்டர் மற்றும் ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனங்களின் திட்டங்களை தொடங்கி வைத்து, கோத்ரெஜ் நிறுவனத்தின் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

அப்போது முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: தொழில் துறையில் மேன்மையும், தனித்த தொழில்வளமும் கொண்ட மாநிலம் தமிழகம். பொருளாதார வளர்ச்சியில் அதிவிரைவுப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் தமிழகத்துக்கு, கூடுதல் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலமாக, மேலும், தொழில் வளர்ச்சிக்கு இந்த மாநாடு வழிவகுத்துக் கொடுக்கும்.

EVA STALIN IAS ACADEMY

கடந்த இரண்டரை ஆண்டுகளாகவே, 'முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழகம்' என்ற அங்கீகாரத்தை பெற்றுள்ளது. இம்மாநாடு தொழில்மயமாக்கல் வரலாற்றில், ஒரு மகத்தான அத்தியாயமாக இருக்கப் போகிறது. இந்திய பொருளாதார வளர்ச்சியை வடிவமைப்பதில் தமிழகம் முக்கிய பங்காற்ற வேண்டும் என்பதற்காகவே, 2030-ம் ஆண்டுக்குள், 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்துள்ளேன்.

ஒரு மாநிலத்தில், தொழில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால், அந்த மாநிலத்தின் ஆட்சி மேல் நல்லெண்ணம், சட்டம்-ஒழுங்கு சிறப்பாக பேணப்பட்டு, அமைதியான சூழல் நிலவ வேண்டும். உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக இருக்கவேண்டும். 2021-ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல் இந்த அம்சங்கள் தமிழகத்தில் இருப்பதால்தான் முதலீடுகள் குவிகின்றன. தமிழகம் முழுவதும் பரவலான மற்றும் சீரான வளர்ச்சியை ஏற்படுத்துவதே எங்கள் லட்சியம். அதனால்தான், மாநிலம் முழுவதும் பரவலாக தொழில்திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில், முதலீடு செய்யுங்கள். அனைவரும் சேர்ந்து எதிர்காலத்தை பகிர்ந்து கொள்வோம். தமிழக அரசு உங்களுக்கு அனைத்து வகையிலும், உறுதுணையாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

மாநாட்டில் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் பேசியதாவது: தமிழ்நாடு, வரும் 2030-ம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் பொருளாதார இலக்கை அடைய பயணித்து கொண்டிருப்பது இந்தியாவுக்குள் மட்டுமின்றி தமிழகத்துக்குள்ளும் புதிய தொழிற்சாலைகளை கொண்டு வர வழிவகுக்கும். புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி தரும். இவற்றின் மூலம் நாடு வளர்ச்சி பாதையை நோக்கி முன்னேறும். இதற்கு வித்திட்ட தமிழக மக்கள் மற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

எனது வாழ்த்துகள். இந்த சென்னை வர்த்தக மைய வளாகத்தை குறுகிய காலத்துக்குள் உருவாக்கியுள்ளதைப்போல், மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைத்து செயல்படும்போது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெறும். பிரதமரின் மனதில் தமிழகத்துக்கு சிறப்பான இடம் உண்டு. கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா பொருளாதாரத்தில் பெருவளர்ச்சி அடைந்துள்ளது. குறிப்பாக கடந்த 2 காலாண்டுகளில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.7 சதவீதம் உயர்ந்துள்ளது. பெண்கள் வேலைக்கு வரும்போது, வீட்டு வேலைகளை செய்ய தொழில்நுட்பங்களை மாற்றி அமைப்பார்கள். இதனால் வருங்காலத்தில் உலகளவில் துணி துவைக்கும் இயந்திரம், டிஸ் வாசர்ஸ் போன்றவற்றுக்கு முதன்மை சந்தையாக இந்தியா விளங்கும்.

அடுத்த 30 ஆண்டுகளில், 35 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி, இந்தியா சென்று கொண்டிருக்கிறது. இதனால் உலகளவில் வர்த்தகம் செய்வதற்கு சிறந்த இடமாக இந்தியா மாறும். இவ்வாறு அவர் பேசினார்.

மாநாட்டில், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்புரையாற்றினார். தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா நன்றியுரையாற்றினார்.

மாநாட்டில், துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்கள், பல வெளிநாடுகளின் தூதரக அதிகாரிகள், உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

STALIN IAS ACADEMY

## கார்கில் மலைப்பகுதியில் இரவு நேரத்தில் தரையிறங்கி சி-130ஜே விமானம் சாதனை



**புதுடெல்லி:** இந்திய விமானப் படைக்கு சொந்தமான சி-130 ஜே விமானம், கார்கில் மலைப்பகுதியில் இரவு நேரத்தில் முதல் முறையாக தரையிறங்கி சாதனை படைத்துள்ளது.

இதுகுறித்து விமானப்படையின் எக்ஸ் சமூக வலைதளத்தில், "இந்திய விமானப்படையின் சி-130 ஜே விமானம் சமீபத்தில் கார்கில் விமான தளத்தில் இரவு நேரத்தில் முதல் முறையாக தரையிறங்கியது. விமானப்படையின் கருட் கமாண்டோ படையைச் சேர்ந்த வீரர்கள் பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு துல்லியமாக வழிகாட்டும் (Terrain masking) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த சாதனையை படைத்தனர்" என பதிவிடப்பட்டுள்ளது.

போர் காலத்தில் எதிரிகளுக்கு தெரியாமல் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு திடீரென சென்று தாக்குதல் நடத்த டெரெய்ன் மாஸ்கிங் தொழில்நுட்பம் உதவும் என கூறப்படுகிறது. மலைப்பாங்கான பகுதியில் போர், இயற்கைப் பேரிடர் உள்ளிட்ட எத்தகைய சவாலான சூழ்நிலையிலும் திறம்பட செயல்பட இந்திய விமானப்படை தயார் நிலையில் இருக்கிறது என்பதை உணர்த்துவதாக இந்த சாதனை அமைந்துள்ளது என பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

லடாக் யூனியன் பிரதேசத்தில் உள்ள கார்கில் மாவட்டத்தின் தலைநகரம் கார்கில். மலைகளால் சூழப்பட்டுள்ளது. இப்பகுதி கடல் மட்டத்திலிருந்து 8,780 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இந்த நகரின் வெப்பநிலை மிகவும் மோசமாக இருக்கும். குளிர் காலத்தில் வெப்பநிலை மைனஸ் 20 டிகிரிக்கும் கீழ் செல்லும். இப்பகுதி உலகின் மிக உயரமான போர்க்களமாக கருதப்படுகிறது. கடந்த 1999-ம் ஆண்டு கார்கிலில் ஊடுருவிய பாகிஸ்தான் ராணுவத்தினரை இந்திய ராணுவத்தினர் விரட்டி அடித்தது குறிப்பிடத்தக்கது

## பொதுத்தேர்தலில் வெற்றி: 5-வது முறையாக வங்கதேச பிரதமர் ஆகிறார் ஷேக் ஹசீனா



**டாக்கா** : வங்கதேசத்தின் 12-வது பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகி வருகின்றன. முதல்கட்ட முடிவுகளின்படி, வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா தொடர்ந்து நான்காவது முறையாக வெற்றி பெற்றுள்ளார். தேர்தலில் அவரது கட்சியான அவாமி லீக் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்று வெற்றியை ருசித்துள்ளது.

நேற்று அனைத்து இடங்களிலும் வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி மொத்தமுள்ள 300 இடங்களில் 200 இடங்களை கைப்பற்றியுள்ளது. கிட்டத்தட்ட 90 சதவீத முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் மூன்றில் இரண்டு பங்கு வெற்றியை அவாமி லீக் பெற்றுள்ளதாக அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஷேக் ஹசீனா எட்டாவது முறையாக கோபால்கஞ்ச்-3 தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். 1986ல் இருந்து இத்தொகுதியில் போட்டியிட்டு வரும் அவர், இம்முறை 2,49,965 வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட போட்டியாளர்களில் முக்கியமானவரான பங்களாதேஷ் சுப்ரீம் கட்சியைச் சேர்ந்த எம் நிஜாம் உதின் லஷ்கர் வெறும் 469 வாக்குகள் மட்டுமே பெற்றார். இதன்மூலம் ஷேக் ஹசீனா, அந்நாட்டின் பிரதமராக ஐந்தாவது முறையாக பதவி ஏற்க இருக்கிறார். அதேபோல் தொடர்ச்சியாக நான்காவது முறையாக பதவி ஏற்கவுள்ளார்.வி ஏற்க உள்ளார். இது ஒட்டுமொத்தமாக அவரது கட்சிக்கு 5 வது வெற்றியாகும். வங்கதேச பொதுத்தேர்தலை பிரதான எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) புறக்கணித்துள்ளது.

ஹசீனா பதவி விலக வேண்டும் என்ற தங்களின் கோரிக்கையை நிராகரித்ததைத் தொடர்ந்து தேர்தலை புறக்கணிப்பதாக பிஎன்பி கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர் கலீதா ஜியா அறிவித்தார். தேர்தலுக்கு முன்பாக நாட்டில் பல்வேறு இடங்களில் வன்முறைகள் நிகழ்ந்தன. பல்வேறு இடங்களில் வாக்குச்சாவடிகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

**இந்தியா நம்பகமான நட்பு நாடு:** "இந்தியா ஒரு நம்பகமான நட்பு நாடு, 1971-ம் ஆண்டு விடுதலைப் போரின்போது எங்களுக்கு அடைக்கலம் கொடுத்தது" என்று வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார். தேர்தல் நாளில் இந்தியாவுக்கு அவர் அனுப்பிய செய்தி குறித்து அவரிடம் கேட்டபோது, “நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். இந்தியா எங்களின் நம்பகமான நட்பு நாடு. எங்களின் விடுதலைப் போரின் போது எங்களுக்கு ஆதரவளித்தது. 1975-க்கு பின்னர் நாங்கள் எங்கள் ஒட்டுமொத்த குடும்பத்தையும் இழந்தோம். அவர்கள் எங்களுக்கு அடைக்கலம் கொடுத்தார்கள். இந்திய மக்களுக்கு எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்று தெரிவித்தார். இந்தியாவும் வங்கதேசமும் வரலாறு, கலாச்சாரம் மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் நெருங்கிய பன்முக உறவுகளை பகிர்ந்து கொள்கின்றன. சமீப காலமாக அவை மிகவும் வலுபெற்றுள்ளன.

## சைபர் தாக்குதலால் மாலத்தீவு அரசு இணையதளங்கள் முடங்கின



**மாலே:** சைபர் தாக்குதலால் மாலத்தீவு அரசின் இணைய தளங்கள் முடங்கி உள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் லட்சத்தீவுக்கு பயணம் மேற்கொண்டார். அந்த தீவின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் தீவின் அழகான, தூய்மையான கடற்கரை பகுதிகளின் புகைப்படங்கள், வீடியோவை அவர் சமூக வலைதளங்களில் வெளியிட்டார். இதனால் சுற்றுலா துறையை நம்பியிருக்கும் மாலத்தீவு அதிர்ச்சி அடைந்தது. பிரதமர் மோடி, இந்தியாவுக்கு எதிராக மாலத்தீவு அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் அவதூறாக விமர்சித்தனர்.

இந்த சூழலில் மாலத்தீவின் அரசு இணையதளங்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது. மாலத்தீவு வெளியுறவுத்துறை, சுற்றுலா துறை இணையதளங்கள் முழுமையாக முடங்கின. மாலத்தீவு அரசின் பெரும்பாலான இணையதளங்கள் ஹேக் செய்யப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதுதொடர்பாக மாலத்தீவு அரசு தரப்பில் அதிகாரபூர்வமாக எவ்வித தகவலும் வெளியிடப்படவில்லை.

## நேபாளத்துக்கு இந்தியா 75 மில்லியன் டாலர் நிதி உதவி: வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அறிவிப்பு




**காத்மாண்டு:** கடந்த ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சீரமைக்க நேபாளத்துக்கு இந்தியா அந்நாட்டு மதிப்புப்படி ஆயிரம் கோடி ரூபாய் (75 மில்லியன் டாலர்) வழங்கும் என்று வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இரண்டு நாள் பயணமாக நேற்று நேபாள தலைநகர் காத்மாண்டு சென்ற இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், அங்கு இந்திய நிதி உதவியுடன் கட்டப்பட்டுள்ள திரிபுவன் பல்கலைக்கழக மைய நூலகத்தை இன்று திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய அவர், "திரிபுவன் பல்கலைக்கழக மைய நூலகம், 25 பள்ளிகள், 32 சுகாதாரத் திட்டங்கள் ஆகியவற்றைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஆண்டு நவம்பர் 3ம் தேதி நேபாளத்தின் ஜாஜர்கோட் மாவட்டத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் பேரழிவுகளை அறிந்து இந்தியாவும் வருத்தமடைந்தது.

நிலநடுக்கம் ஏற்பட்ட 48 மணி நேரத்துக்குள் இந்திய அரசு, நேபாளத்துக்கு அவசர உதவிகளை வழங்கத் தொடங்கியது. அதோடு, சாத்தியமான அனைத்து

உதவிகளையும் நேபாளத்துக்கு இந்தியா வழங்கும் என பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

அதன்படி, நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பை புனரமைப்பதற்காக நேபாள ரூபாய் மதிப்பில் 1,000 கோடி, அதாவது 75 மில்லியன் டாலர் நிதி உதவியை வழங்க இந்தியா முடிவெடுத்துள்ளது. நேபாள பிரதமர் பிரசண்டாவை நேற்று சந்தித்தபோது நான் இதனை அவரிடம் தெரிவித்தேன். நேபாள மக்களுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவாக நிற்போம். நேபாள அரசின் முயற்சிகளுக்கு பங்களிப்போம்.

நேபாளத்துக்கு இந்தியா 1 பில்லியன் அமெரிக்க டாலர் வழங்கி உள்ளது. இதில், 250 மில்லியன் டாலர் மாநியமாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 750 மில்லியன் டாலர் கடனாக அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா - நேபாளம் இடையேயான உறவு பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. இது இரு நாட்டு மக்களிடையேயான தொடர்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

நரேந்திர மோடி தலைமையிலான அரசு, அண்டை நாடுகளுடன் குறிப்பாக நேபாளத்துடனான தனது உறவை தொடர்ந்து மேம்படுத்துவதில் உறுதிபூண்டுள்ளது. அனைவரோடும் இணைந்து அனைவருக்குமான வளர்ச்சி எனும் லட்சியத்தை முன்னோக்கி நகர்த்தவும், நேபாளம் உள்ளிட்ட நட்பு நாடுகளை உடன் அழைத்துச் செல்லவும் இந்திய அரசு உறுதிபூண்டுள்ளது. வரும் நாட்களில் இந்திய - நோபள உறவு மேலும் வலுவடைந்து புதிய உச்சங்களைத் தொடுவோம்" என தெரிவித்தார்

EV